Sri A. VEDARATHNAM : எந்தத் தேதி வரை இருந்த நிலவரத்தைப்பற்றி தமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது என்று கனம் அமைச்சர் சொல்லவில்லை. ஆரம்பத்திலேயே, நான் முன்பு குறிப்பிட்ட அந்த ஒரு காலனியில் மாத்திரம் பல உயிர்ச் சேதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மேலும் அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குள்ளும் பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கே வைசூரி நோயினால் ஒரு உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்ற பதிலை கனம் மந்திரியிடமிருந்து கேட்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இந்த விஷயத்தில் கனம் மந்திரி அவர்கள் வேண்டிய கவனம் செலுத்துவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : 8–3–1958 வரை இருந்த நிலவரத்தைப்பற்றி எனக்கு தகவல் வந்திருக்கிறது. அந்தத் தகவலில், 16–11–1957-ம் தேதியுடன் முடிவடையும் வாரத்தில் ஒருவருக்கு வைசூரி கண்டதென்றும் ஒரு உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் வேறு விவரங்களை அறிய விரும்பினால், அதற்கு அவர் தனிக் கேள்வி போடவேண்டும்.

Sri M. JAGANNATHAN : தஞ்சாவூர் ஜில்லாவில், குறிப்பாக வேதாரண்யம், மாயவரம் பகுதிகளில், அடிக்கடி காலரா, அம்மை போன்ற வியாதிகள் பரவுகின்றன என்ற புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அங்கே அந்த நோய்களைத் தடுப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : வீண் புகார்களை நாம் கவனிக்கவேண்டியதில்லை. ஆதார பூர்வமாகப் புகார் கூறினால் அதை கவனிக்கலாம்.

Mr. SPEAKER : Let us take short notice question No. 19 afterwards.

Non-gazetted Officers

* 20 *S.N.Q.*—**Sri M. KALYANASUNDARAM** : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any memorandum was presented by the Government to the Planning Commission making prpoosals for improving the scales of pay and emoluments of Non-gazetted Officers and the last grade staff of the State Government;

(*b*) whether a copy of the Memorandum will be placed on the Table of the House; and

(*c*) what reply was received from the Planning Commission?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) A ' note on disparity in scales of pay and dearness allowance between Central Government employees and State Government employees holding comparable posts ' with suggestions for its removal has been submitted to the Planning Commission for their consideration.

(*b*) Relevant extracts[a] from the note are being placed on the Table of the House;

(*c*) No reply has so far been received.

Sri M. KALYANASUNDARAM : நம் ராஜ்ய நிதி அமைச்சர் அவர்கள் திட்டக் கமிஷனுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில், மத்திய சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களுக்கும் ராஜ்ய சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களுக்கும் இடையே இருக்கும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்க வேண்டுமென்று கூறியிருப்பது ஒரு புறம் இருக்க, ராஜ்ய அரசாங்க

---

[a] Printed as Appendix I on pages 159–162 infra.

ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணமாக 5 ரூபாய் சம்பள உயர்வு கொடுப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் நிதி உதவி யளிக்க வேண்டுமென்று கோரியிருப்பதை நான் பார்க்கிறேன். இடைக்கால நிவாரண கோரிக்கை சம்பந்தமாகவாவது திட்டக் கமிஷன் உடனடி யாக தங்கள் முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்தார் கோரினார்களா ? இந்த கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமானால், திட்டக் கமிஷன் மட்டும் முடிவுக்கு வந்து, தன் முடிவை அறிவித்தால் போதுமா? மத்திய சர்க்கார் நிதி இலாகாவும் முடிவுக்கு வந்து அந்த முடிவை அறி விக்க வேண்டாமா ? அப்படியானால், மத்திய சர்க்கார் நிதி இலாகாவிற்கும் இது தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : திட்டக்கமிஷனுக்கு அனுப்பு வதற்காகத் தான் இந்த "நோட்" தயாரிக்கப்பட்டது. ஆனால் இது மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

SRI S. LAZAR : மத்திய சர்க்காரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பணம் வருவது ஒரு புறமிருக்க, இந்த ஊழியர்களுக்கு நிவாரணமளிப் பதற்கு மாநில சர்க்கார் ஏதாவது திட்டமிட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நம்முடைய இந்த கோரிக்கைகள் குறித்து மத்திய சர்க்கார் ஒரு முடிவிற்கு வந்து அவை அறிவிப்பதற்கு முன், நாம் எந்த விதமான முடிவும் செய்வதற்கில்லை.

SRI K. VINAYAKAM : Sir, in the body of the note placed on the table of the House, some lines have ben mutilated or left out. May I know the significance of those missing sentences? In the absence of any reply received from the Central Government, are we—the State Government—in a very helpless attitude to go to the succour of the ailing non-gazetted officers?

MR. SPEAKER : I do not find mutilation in the paper before us.

THE HON. SRI C. SUBRAMANIAM : Only extracts have been placed. A few passages have been removed because I thought that it might not be necessary and relevant to the question to place those passages on the table of the House.

SRI K. VINAYAKAM : My question has not been answered, Sir?

MR. SPEAKER : Not necessary. Perhaps he is not willing to answer it.

SRI K. ANBAZHAGAN : கெஜட் பதிவுபெறாத அரசாங்க அலு வலர்கள் அடிக்கடி தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லிக் குமுறிக் கொண்டிருக்கும் இந்த நிலையில், இந்த கோரிக்கை குறித்து திட்டக் குழுவினரின் முடிவு வெளி வருவதற்குக் காலதாமதமாகுமானால், அதைப் பொருட்படுத்தாமல் உடனடியாக இந்த அலுவலர்களுக்கு ஏதாவது நிவா ரணமளிக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் முன்பே சொன்னதுபோல், மத்திய அரசாங்கத்தின் முடிவு தெரிவதற்கு முன்பு, அதைப்பற்றி ஆலோசிப்பதற்கில்லை. என்.ஜி.ஓ.-க்களுடைய குமுறலைப் பொறுத்தவரையில், அரசியல் கட்சிகளை அவர்கள் பயன்படுத்திக்கொண் டாலோ அல்லது அரசியல் கட்சிகள் அவர்களுடைய குமுறலைப் பயன் படுத்திக்கொண்டாலோ, பிரச்னைக்கு முடிவு காணப்படுவதற்கு பதிலாக பிரச்னை நீடித்துக்கொண்டே யிருக்கும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.